# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.1/2018 Date: 21.03.2025.

PW2- சதீஷ்குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்து போன வீரமணி என் அண்ணன். நான் TN 52 B 4006 என்ற லாரியில் கிளினராக வேலை செய்ததற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது என் அண்ணன் நடந்து வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்றார். அது கிழமேல் ரோடு. அந்த ரோட்டின் வடபுறமாக நடந்து சென்றார். விபத்து சம்பந்தமாக போலீஸ் தயார் செய்த மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை. என் அண்ணன் கவனமாக வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அவர் மண் தடத்தில் தான் வந்தார். என் அண்ணன் சாலையை குறுக்கே கடக்க முயன்ற போது தான் விபத்து நடந்தது என்றாலும், அவரது கவனகுறைவு தான் விபத்திற்கு காரணம் என்றாலும் சரியல்ல. இறந்து போனது எனக்கு அண்ணன் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சதீஷ்குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.